


உள்ளே......

* நாகை மாவட்ட ஆட்சியரின் சுதந்திர தின செய்தி....

* பாரம்பரிய வேலைகளில் இளைஞர்களின் ஈடுபாடு..

* சுதந்திர போராட்டத் தியாகிகளின் இளமைகால அனுபவங்கள் .....

* மக்கள் பங்கேற்பும் பாசன மேம்பாடும் குறித்த கண்ணோட்டம்....

* ஆக்ஸ்பாம் பெட்ராக் ஆய்வு...

ஆலோசகர்
திரு.ஜெரால்டு
ஆசிரியர் குழு
E.பழனி
K.ஏகாம்பரி
அலுவலக முகவரி
மே/பா.பெட்ராக்
குடியிருப்பு எண்.5,
மேட்டுபங்களா,
புதிய கடற்கரைச் சாலை,
காடம்பாடி,
நாகப்பட்டினம்-611 001.

தலையங்கம்

## நாகை மாவட்டத்தின் முன்னேற்ற கனவுகள்

கனா கண்டேன் !
காடு வளரக் கண்டேன், கழனி செழிக்கக் கண்டேன் !
பண்ணைக் குட்டை அமைத்து நிலத்தடி நீர்மட்டம் உயரக் கண்டேன் !
கடல் அலையைத் தடுக்க மரம் அரண் அமைக்கக் கண்டேன் !
பாதுகாப்பு உபகரணம் ஏற்று மீனவர் சமுதாயம் மின்னலாய் ஜொலிக்கக் கண்டேன்
குடிசை வீடுகள் இல்லா குடிமக்கள் வாழக் கண்டேன் !
வேளாண்மை நலிந்த நிலையில் மாற்றுத் தொழில் மலரக் கண்டேன் !
நகருக்கு ஒப்பான கல்வி ஊரகத்தில் உருவாகக் கண்டேன் !
குழந்தை தொழிலாளர் இல்லா மாணவர் சமுதாயம் மலரக் கண்டேன் !
மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப் படுத்த மக்கள் மனதார ஏற்கக் கண்டேன் !
திட்டமிடல் கிளைமூலம் இல்லாமல் வேர் மூலம் வளரக் கண்டேன் !
சகதி இல்லா தெருவினிலே சலனமின்றி நடக்கக் கண்டே ண் !
இலவசம் ஏற்காத சமுதாயம் எங்கும் உதித்திடக் கண்டேன் !
மகளிர் சுய உதவிக் குழுக்களின் மகத்தான முன்னேற்றம் கண்டேன் !
பாதுகாப்பான குடிநீர் பாதிப்பின்றி கிடைக்கக் கண்டேன் !
வேலையில்லா இளைஞர் தன்னில் தொழில் பயிற்சி ஏற்கக் கண்டே ண் !
ஊனமுற்றோர் வாழ்க்கை இன்னலின்றி ஒளிமயமாகக் கண்டேன்!
பழங்குடியினர் வாழ்க்கை தன்னில் ஏற்றத் தாழ்வுகள் அகலக் கண்டேன் !
கல்வி அறிவு நிறைந்த பெண்கள் சமுதாயம் கண்டேன் !
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று குடிமக்கள் உணரக் கண்டேன் !
சமத்துவம் கண்டேன். சமச்சீராண்மை கண்டேன் !
புதிய நாகை உருவாகக் கண்டேண் !

கனவு கானுங்கள் அதை நிஜமாக்க கடினமாக உழையுங்கள் என்று இளைஞர்களின் வழிக்காட்டி நம் முன்னாள் ஜனாதிபதி டாக்டர். அப்துல்கலாம் கூறினார் எனவே இம்மாத அலையாத்தியின் அசைவுகளை சிறப்பிக்க நாகை மாவட்ட கனவுகளை தலையங்கமாக வெளியிடுவதில் எம் அலையாத்தி குழுமம் பெருமிதம் கொள்கிறது. 61- வது சுதந்திர தின கொண்டாட்டத்தில் மேற்க்கண்ட கனவுகள் பாரத தரணியில் விரைவில் மலர்ந்திட அலையாத்தியின் வாழ்த்துகள்.

நட்புடன் .... - ஆசிரியர்

## எங்களைப் பற்றி ...

நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடற்கரையோர கிராமங்களில் பேரழிவை உருவாக்கிய சுனாமிக்கு பிறகு மக்களின் மறுவாழ்விற்குத் தேவையான தகவல்களை பயனாளிகளுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் மற்றும் அரசுக்கும் கிடைக்கச் செய்ததில் முக்கிய பங்காற்றிய தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் வளமையத்தின் (NCRC) வழிதோன்றலாக ஜனவரி 2008-ல் ஆரம்பிக்கப்பட்ட பெட்ராக் நிறுவனம்(Bedroc - Building and Enabling Disaster Resilience of Coastal Communities )கடலோர மக்களின் மேம்பாட்டிற்காகவும் பேரிடர் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் நலிவுகளை குறைக்கவும் சமுதாயம் சார்ந்த முன்னோடி திட்டங்களை உருவாக்கி அதனை நடைமுறைபடுத்தி ஏனையோர் பின்பற்றக்கூடிய மாதிரிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.சுனாமி சம்பந்தமான மறுவாழ்வு தகவல்களை வழங்கிக் கொண்டிருக்கும் திரைநெட்டின் (TRINet)இந்த செய்தி மடலானது, பெட்ராக் நிறுவனத்தின் மின்னாட்சிக்கான (e-governance) ஓர் ஆதாரமாக செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# நாகை மாவட்ட ஆட்சியரின் சுதந்திர தின சிறப்புச் செய்தி

அலையாத்தியின் சுதந்திர தின சிறப்பிதழிற்காக நாகை மாவட்ட ஆட்சியர் திருமிகு மு. ஜெயராமன் , இ.ஆ.ப. அவர்களுடன் அலையாத்தியின் ஆசிரியர் குழு மேற்கொண்ட கருத்துப் பரிமாற்ற சிறப்புச் செய்தியை வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறோம்.



ஆசிரியர் : ஆழிப்பேரலை தாக்கி மூன்றரை ஆண்டு காலம் நிறைவடைந்த நிலையில், மறுக்கட்டமைப்பு மற்றும் மறு வாழ்வு பணிகள் முழுமையடைந்து இருக்கிறதா ?.

ஆட்சியர் : ஆழிப்பேரலையால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டம் இது தான். உலகளாவிய பேரிடர் மற்றும் அதற்கான மறு சீரமைப்புப் பணிகளை ஒப்பிடும் போது நாகை மாவட்டத்தில் நடைபெற்று இருக்கும் மறு சீரமைப்பு பணிகள் அனைத்தும் மிக விரைவிலும், நல்ல முறையிலும் நடந்து இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. கடந்த மாதம் 16 ஆம் தேதியுடன் தற்காலிக குடியிருப்பில் வசித்து வந்த அனைத்து மக்களுக்கும் நிரந்தர வீடுகள் தரப்பட்டுயிருப்பது மாவட்ட நிர்வாகத்தின் சாதனை எனச் சொல்லலாம். மொத்தம் கட்ட வேண்டிய 19, 872 வீடுகளில் இது வரையிலும் சுமார் 16, 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு தரப்பட்டுயிருக்கிறது. இந்த நிதி ஆண்டிற்குள் மீதமுள்ள அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும். அடிப்படை வசதிகளான கழிவறை, சாலை, குடிநீர் போன்ற கட்டமைப்புகள் அனைத்தும் விரைவில் அனைத்து நிரந்தர குடியிருப்புப் பகுதிகளிலும் நிறைவேற்றப்படும். மேலும் மறுகட்டமைப்பில் தொண்டு நிறுவனங்களால் நிறைவேற்றப்படாத சிறு வேலைகளை மாவட்ட நிர்வாகமே விரைவில் செயல்படுத்தும்.

மறு வாழ்வுப் பணிகளை பார்க்கும்போது பாதிப்புக்குள்ளான அனைத்து தரப்பு மக்களும் அவர்களின் பழைய வாழ்வாதார நிலைக்கு அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவிகளுடன் திரும்பியிருக்கிறார்கள். மேலும் நிலையான பொருளாதார மற்றும் சுகாதார வளர்ச்சியை நோக்கி பயனிப்பதில் நாகை மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர் : மறுசீரமைப்புப் பணிகளில் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் மக்களின் பங்கேற்பு குறித்த தங்களின் கருத்து என்ன ?.

ஆட்சியர் : ஆழிப்பேரலைதாக்குதலுக்கு உள்ளான நாகை மாவட்ட மக்கள் சகஜ நிலைக்கு திரும்பியிருக்கிறார்கள் என்றால் தொண்டு நிறுவனங்களின் முறையான பங்களிப்பு இருந்ததால் தான். மறு கட்டமைப்பு பணிகளில் தொண்டு நிறுவனங்களின் பணி மிகவும் அற்புதம். இவ்வரிய பணிகளில் மக்களின் பங்கேற்பைப் பார்க்கும் போது திருப்திகரமாகவே இருக்கிறது.

ஆசிரியர் : பேரிடர் பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு மக்களிடம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறதா ?

ஆட்சியர் : மாவட்ட நிர்வாகத்தாலும் தொண்டு நிறுவனங்களாலும், போதிய அளவு பயிற்சியும் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. பஞ்சாயத்து அளவில் பேரிடர் மேலாண்மைக்குழு ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் கடற்கரையோர கிராமங்களில் முன்னெச்சரிக்கைக் கருவிகள் பொருத்தப்பட்டு செயலாக்கத்தில் இருந்து வருகிறது. எதிர் வரும் காலங்களில் சுகாதாரத்தில் ஏற்படும் இடர்களைத் தவிர்க்க மாவட்ட நிர்வாகம் பொது திட்டத்தை தயார் செய்து செயல்படுத்த முடிவு செய்து இருக்கிறது.

ஆசிரியர் : நாகை மாவட்ட மக்களுக்கு தங்களின் சுதந்திர தின செய்தி என்ன ?

ஆட்சியர் : அனைத்து தரப்பு மக்களும் நிலையான பொருளாதார மேம்பாடு அடைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அரசின் நலத்திட்டங்கள் அனைத்தையும் அனைவரும் பயன்படுத்தும் வகையில் மக்களுக்கு சென்றடைய வேண்டிய அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்படும். சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டு சுகாதாரத்தில் வளர்ந்த மாவட்டமாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நாகை மாவட்டத்தில் இருக்கக் கூடிய சுய உதவி குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக சுழல் நிதி வழங்கி ஊக்கப்படுத்தப்படும். மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை உரிய நேரத்தில் கிடைக்கவும் வேலை வாய்ப்பை பெருக்கவும் சிறு தொழிற்சாலைகள் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலும் 10 ஆண்டுகளில் நாகை தன்னிறைவு பெற்ற வளர்ந்த மாவட்டமாக மாறும் என்பதில் ஐயமில்லை. இதற்காக எனது பணிக்காலத்தில் கடற்கரையோர மாவட்டங்களிலே, குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் நாகையை அனைத்து துறைகளிலும் வளர்ந்த மாவட்டமாக மாற்றுவதற்கான முதற்கட்ட முயற்சிகள் அனைத்தும் தமிழக முதல்வரின் வழிக்காட்டுதலின் படி மேற்க்கொள்ளப்படும்.

# பாரம்பரிய தொழில் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு

வேகமாக வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்ப சூழலில் படித்த இளைஞர்களின் ஈடுபாடு எவ்வாறு இருக்கிறது என்பதை அறியவும், இயற்கைக்கும் சுற்றுப்புற சூழலுக்கும் பாதிப்பு விளைவிக்காத பாரம்பரிய தொழில்களில் நம் இளைய சமுதாயம் ஈடுபடுகிறதா? முக்கியத்துவம் தருகிறதா? என்பதை அறியவும் அலையாத்தியின் சுதந்திர தின சிறப்பிதழிற்காக நாகை மாவட்டத்தில் பாரம்பரிய தொழில் மற்றும் மாற்று தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டு இருக்கும் இளைஞர்களுடன் கருத்து பரிமாற்றம் .

**திருமிகு. அமிர்தகலா, துடரிப்பேட்டை ,காழியப்பநல்லூர்.**

படித்து முடித்தாலும் , வாழ்க்கைக்கு உதவியாக இருப்பது நம் பரம்பரை தொழில் தாங்க. கல்யாணம் ஆனபோது என் குடும்பத்தைக் கவனிக்க யாருமில்லை. குடும்பத்தையும் பார்த்துகிட்டு, வேலையும் செய்து சம்பாதிக்க உதவியாக இருப்பது விவசாய கூலி வேலை தாங்க. என் வீட்டு வயலில் வேலை இல்லாத போது வெளியில் கூலி வேலைக்குப் போறேன். என் வீட்டுக்காரரும் படிச்சிட்டு விவசாயம்தான் செய்றார். நம் சுயத்தொழில் என்னைக்கும் நம்மை கைவிடாது. நாம் முன்னேறவும் வருமானத்தைப் பெருக்கவும் விவசாயத்தொழில் உதவுகிறது. விவசாயம் செய்தால் கண்டிப்பாக நல்ல வருமானம் கிடைக்கும். நம் வயலுக்கு ஆள் வைத்து வேலை செய்தால், கூலி கொடுக்கனும். நாம் அந்த வேலையைச் செய்தால் அந்த பணம் நமக்கு லாபம் தானே குடும்பத்துக்குள் இருந்து கவனிச்சிக்கிட்டே இந்த வேலையைத் தொடர முடிவதால் படித்த கம்யூட்டர் படிப்பை மறந்துட்டேங்க.

**திரு. வி. கோபிநாத், பி.ஆர்.புரம்.**



நான் படிச்ச படிப்பிற்க்கும் வேலைக்கும் சம்பந்தம் இல்ல. எங்க குலத்தொழிலான தச்சு த்தொழில் தான் செய்கிறேன். ஏன்னா இது எனக்கு ரொம்ப நல்லா தெரிஞ்ச வேலை சின்னப்பிள்ளையிருந்து கத்துக்கிட்டேன். படிச்சு முடிச்சதும் அதற்கேற்ற வேலைதேடி நேரத்தையும் பணத்தையும் செலவழிக்காமல் இந்த தொழிலில் ஈடுபட்டதால என் குடும்ப வருமானத்தை பெருக்கவும், பிறருக்கு வேலை தரவும் என்னால் முடியுது. தெரிந்த வேலையை திறம்பட செய்து பிறருக்கு உதவினாலே இளைய சமுதாயம் சிறந்த வழிகாட்டியாக மாற முடியும் .

**திரு.கே. சத்தியசீலன், ஆரியநாட்டுத்தெரு, வேளாங்கன்னி.**

வேலை கிடைச்சாலும் சம்பளம் போதுமானதாக இல்லை. எனவே பிறரிடம் வேலை பார்ப்பதை விட எங்கள் பாரம்பரிய தொழிலான மீன் பிடிக்கும் தொழிலையே நான் செய்கிறேன். படிச்சி முடிச்சதும் அண்ணனுக்கு உதவியாக போட்டுக்கு போனேன். இப்ப நானே சொந்தமாக போட்டு வைத்து தொழில் பண்ணும் அளவிற்கு முன்னேறி இருக்கிறேன். இதில் எங்களுக்குப் போதுமான வருமானம் கிடைக்கிறது. நம்ம கஷ்டப்பட்டு பாடுபட்டால் மட்டுமே நிறைய பொருளாதாரம் ஈட்டமுடியும். எனவே இளைஞர்கள் படிப்பை அறிவு வளர்ச்சிக்கு ஒரு தகுதியாக மட்டுமே எடுத்துக்கொண்டு சொந்த காலில் நின்று கடுமையாக உழைத்தால் சமுகத்தில் முன்னேற முடியும்.



**திரு. ரவீந்திரன் , இராதாநல்லூர்.**

பட்ட படிப்பு முடிச்சிட்டு அதற்கேற்ற வேலையை தேடிக்கிட்டே இருந்தால் நம்ம வளர்ச்சிதான் தடைபடும். இந்தியாவின் வளர்ச்சி இளைஞர்களின் கையில் இருப்பதாக அப்துல்கலாம் சொல்கிறார். எனவே என்னை போன்ற இளைஞர்கள் படிப்பை நம்பிகிட்டு இல்லாமல் கடின உழைப்பை மேற்கொள்ள வேண்டும். அப்பா , அம்மா சம்பாத்தியத்தில் வாழாமல் நாம் உழைத்து அவர்களை காப்பாற்ற வேண்டும். படிப்புக்கேற்ற வேலையில்லை என்றாலும் வெட்கமில்லாமல் கிடைக்கும் வேலையை செய்தால்தான் நம் சமூகமும், நாடும் முன்னேறும். படித்து வேலைக்கு போகாத இளைஞர்கள் மற்றவர்களை ஏமாற்றுவது மட்டுமல்லாமல் தம்முடைய எதிர்காலத்தையும் ஏமாற்றி கொள்கிறார்கள். அடுத்தவரிடம் கையேந்தி நிற்காமல் தெரிந்த வேலையை திறமையாக செய்தால் தான் இளைஞர்கள் வெற்றி அடைய முடியும், வழிகாட்ட முடியும்.

**திரு. சிவக்குமார் டீக்கடை, சாவடி, அனந்த மங்கலம்.**

முதலில் வேலை தேடி அலைந்தேன் ஒரு இடத்தில் வேலை கிடைத்தது. சம்பளம் கம்மியாக இருந்தது, மனசுக்கு பிடிக்கவில்லை. நாமே ஏதாவது சொந்தமாக செய்யனும்ன்னு நினைச்சேன். சொந்த கட்டிடம் உட்பட ரூ. 20,000/- கொண்டு ஒரு டீக்கடையை வைத்தேன், 2 வருடமாக அந்த டீக்கடை மூலம் போதியவருமானம் கிடைக்கிறது. சுதந்திர இந்தியாவில் மற்றவரிடம் கைநீட்டி சம்பளம் வாங்கி வாழ்வில் முன்னேற முடியாமல் தவிப்பதைவிட சுதந்திரமாக தைரியமாக நாமே முதலாளியாக மாறி ஒரு தொழில் செய்வதில் ரொம்ப ஆனந்தமாக இருக்கு. படிப்புக்கேற்ற வேலையைத் தேடி அலையாமல் நமக்கேற்ற வேலையில் திறமையாக சம்பாதித்து சாதிக்க முடியும். என்னிடம் விவசாய நிலமும் இருக்கு அங்கும் விவசாயத் தொழில் செய்கிறேன். இதுபோல் இன்றைய நம் இளைஞர் சமுதாயம் இருக்கும் வளங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்தி வீடும், நாடும் சிறக்க உழைக்க வேண்டும்.

**திரு. அன்பழகன் வழக்கறிஞர் , வடக்கு சல்லி குளம் வேட்டைக்காரனிருப்பு.**

வழக்கறிஞருக்கு படித்த நான் விவசாயத்தில் குறிப்பா இயற்கை விவசாயத்தில் ஈடுபட முக்கிய காரணம் விவசாயத்தில் கிடைக்கும் நிரந்தர வருமானம். படித்து முடித்தவுடன் இரண்டு வருடம் வழக்கறிஞர் வேலை பார்த்தேன். இந்த வேலையில் மனசுக்கு ஒரு நிம்மதி இல்லை. பொய் அதிகமாக பேச வேண்டியிருந்தது. அதனால பாரம்பரிய மாக எங்கள் குடும்பம் செய்துவந்த விவசாய வேலைக்கு திரும்பிட்டேன். விவசாயமாக இருந்தாலும் சரி வேறு எந்த தொழிலாக இருந்தாலும் சரி திறமையோடு கஷ்டப்பட்டு உழைத்தால் அதற்குரிய பலன் கட்டாயமாக கிடைக்கும்.



சுனாமி வந்து எங்களது விவசாயத்தை மட்டும் அழிக்க வில்லை, விவசாயத்தில் நாங்கள் கடைபிடித்து வந்த அறிவியல் சார்ந்த ரசாயண பொருட்கள் பயன்படுத்தும் முறையும் அழிந்தது. இயற்கை விவசாயத்தினால போதுமான லாபம் கிடைக்க வில்லை என சொன்னாலும், இந்த நிலை இரண்டு மூன்று வருடத்திற்கு மட்டுமே நீடிக்கும், பிறகு நீடித்த நிலையான வருமானம் கிடைக்கும். இயற்கை விவசாயத்தில் செலவு குறைவு என்பதால் போதுமான லாபம் கிடைக்க வழி இருக்கு. இயற்கை விவசாயத்தினை வேளாண்மை துறையும், அரசும் ஊக்கு விக்கவேண்டும்.

பிற மாநிலங்களான கேரளா, ஆந்திராவில் இருப்பது போல் தமிழ்நாட்டிலும் இயற்கை விவசாயத்திற்கு மாநியம் வழங்க வேண்டும். சுதந்திரமடைந்து 60- ஆண்டு ஆன நிலையில் கல்வி முதற்கொண்டு அடிப்படை தேவைகள் அனைத்தும் வியாபார மயமாகிவிட்டது. இதனைத் தடுக்க இளைஞர்களின் ஆக்கப்பூர்வமான செயல்திட்டங்கள் சமுக வளர்சிக்குத் தேவை. இன்றைய காலக் கட்டத்தில் படிப்பிற்கு தகுந்த வேலையைத் தான் அனைவரும் தேடுகிறார்கள். ஆனால் இருக்கிற வேலையைத் திறம்பட செய்தாலே வேலையில்லா திண்டாட்டம் மறையும்.

## சுதந்திர போராட்ட தியாகிகள் தங்கள் இளமை கால அனுபவங்களைப் பகிர்தல்.

அலையாத்தியின் அசைவுகளுக்காக சுதந்திர போராட்ட தியாகி கே.வைரப்பன் அவர்களின் துணைவியார் வி. சங்கரி அவர்களின் செய்தி பகிர்வு.

எங்க வீட்டுக்காரர் வெள்ளகாரங்களை எதிர்த்துப் போராடின போது அவருக்கு உறுதுணையா இருந்து பல விஷயங்களை பார்த்து இருக்கிறேன். இன்னைக்குத்தான் நம் நாட்டுல நூற்றுக்கணக்கான கட்சிகள் இருக்கு. எல்லா கட்சிக்காரங்களுமே அவுங்க கட்சியினுடைய லாபத்திற்கும், சொந்த லாபத்திற்காகவும் மட்டுமே அப்பப்ப போராட்டம், கோஷம் எல்லாம் போடுறாங்க. சுதந்திரத்திற்கு முன்னாடி இப்படி இல்ல. எல்லாரும் காங்கிரஸ் கட்சி என்ற பேருல பொது விசயத்திற்காக போராட்டம் நடத்துனாங்க. எங்க வீட்டுக்காரர் வீட்டுல எங்க இருந்தாரு சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களோடு போராட்டத்துல பாதி நாளு, ஜெயில பாதி நாளு கழிச்சாரு.

இந்த வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்திற்குப் பெயர் போனது. ராஜாஜி தலைமையில நாங்கள் எல்லாம் உப்பு எடுக்கும் போராட்டம் நடத்தினோம். அந்த சமயத்தில் உப்பு போட்டு சோறு திங்க முடியாது, கடல் தண்ணியை மொண்டு வந்து சாப்பாட்டுக்குப் பயன்படுத்தினோம். இந்த உப்பு சத்தியாகிரக போராட்டத்திற்கு போனதால் எங்க வீட்டுக்காரர் வேலூருல ஆறு மாதம், கடலூருல ஆறு மாதம்ன்னு ஜெயில போட்டுட்டாங்க.



அந்த காலத்தில எங்களுக்கெல்லாம் ஏதுங்க படிப்பு. பொம்பள பிள்ளைகளை வீட்டை விட்டு வெளிய அனுப்ப மாட்டாங்க. ஏன்னா வெள்ளைக்காரங்க கடத்திட்டு போய் விடுவாங்க என்ற பயம். இப்ப நாகரீகம் வளர வளர எல்லாரும் சமமாய்ட்டாங்க. பொம்பளைங்க, ஆம்பளைங்களை விட அதிகமா சம்பாதிக்கிற நிலைமை இருக்கு. இன்னைக்கு நாம அனுபவிக்கிற சுதந்திரம் நிறைய பேருடைய உழைப்பையும் உயிரையும் கொடுத்து வாங்கியது. நாகரிகம் தான் வளர்ந்து இருக்கிறதே தவிர மனுஷ மனம் வளரல, ஒற்றுமை இல்லை, பொது விஷயத்திற்காக போராடுற மன பக்குவம் இல்லை.

இன்னைக்கு பல கட்சிகள்ன்னு வந்து ஒன்னாயிருந்த மக்களை பிரிச்சி வைச்சுட்டாங்க. வெள்ளைக்காரக் காலத்தில இருந்ததை விட இப்ப அநியாயம், அக்கிரமம் பெருத்துப் போச்சி. அப்ப வெள்ளக்காரனை வெரட்டுற சண்டையில உசுரு போச்சி இப்ப சொந்தக்காரச் சண்டையில உசுரு போவுது. நம்ம நாட்டுல எவ்வளவோ பொது பிரச்சனைகள் இருக்கு இந்த பிரச்சனைகளுக்காக போராடுவதற்குப் பதிலா சொந்த லாபத்திற்காக சொந்த மக்களை பலி கொடுக்கிற காலமாக இருக்குது.

அந்த காலத்தில நாங்கள் எல்லாம் எப்படி ஒன்னா பொது நலனுக்காக பாடுப்பட்டோமோ அதுபோல இன்னைக்கு இருக்கிற இளைஞர்களும் பொது நலனுக்காக முன் வந்து போராடுதல் அவசியம். என்னுடைய ஆசை என்னன்னா எல்லாமக்களும் ஒற்றுமையா சந்தோஷமாக நீண்ட ஆயுளோடு இருக்கனும், இதுதான் என்வீட்டுக்காரருடைய ஆசையும் கூட. வந்தே மாதிரம். ஜெய்ஹிந்த்.

**திரு.ஆறுமுகம், நெய்தவாசல்.**

அலையாத்தியின் சுதந்திரதின சிறப்பிதழுக்காக தன்னுடைய 85 வயதிலும் புத்துணர்வுடன் தன் இளமை கால எண்ண அலைகளின் பகிர்வு.

இன்னைக்கு நாம எல்லாம் சுதந்திர காற்றை எந்தவொரு தடையும் இல்லாமல் சுவாசிக்கிறோம்னா எத்தனையோ தியாகிகளின் தன்னலம்மற்ற செயல்பாடுதான் இதற்கு காரணம் இந்த மிகப்பெரிய செயலில் என்னோட பங்கும் இருப்பதை நினைச்சா மிகவும் பெருமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கு.



நான் 16 வயசிலே காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து வெள்ளக்காரங்களை நாட்டை விட்டே வெரட்டனும் என்ற வைராக்கியத்தில காந்தியடிகளோட அகிம்சை வழியிலே பிற தோழர்களோடு இணைந்து போராட ஆரம்பிச்சேன். எங்க போராட்டத்துல ரொம்ப முக்கியமானது காந்தியடிகள் தலைமையில் பொறையாரில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியல் போராட்டம் தான். அன்னைக்கு கள்ளுக்கடை இருக்கக் கூடாது என மறியல் செய்தோம் ஆனா இன்னைக்கு அரசாங்கமே லைசன்ஸ் கொடுத்து ஊரு ஊருக்கு மதுக்கடையைத் திறந்து வைத்திருக்கிறத நினைச்சா அன்று நாம் செய்த போராட்டம் இன்று தோல்வியடைவது போன்ற ஒரு உணர்வு.

பத்தாண்டு காலம் அகிம்சை வழியிலே போராடின நான் என்னுடைய 27 வது வயதில சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவத்தில் பயிற்சி பெற சிங்கப்பூரில் உள்ள சிரம்பாள் என்ற இடத்திற்கு சென்றேன். முதல் 6 மாதம் சுபாஷ் சந்திரபோஸின் அண்ணன் ராஜ்விக்காஷ்போஷ் ஜப்பானிலிருந்து வந்து பயிற்சி கொடுத்தார். பிறகு சுபாஷ் சந்திர போஷ் வந்து ஜப்பானின் உதவியுடன் தீவிர ஆயுத பயிற்சி கொடுத்தார். ஏன் அகிம்சை முறையிலிருந்து புரட்சிக் கட்சிக்கு வந்தேன்னா எவ்வளவு காலம் தான் அகிம்சை முறையில் போராடுறது, ஆயுதமேந்தி வெள்ளையனை அடக்க வேண்டும் என்ற வெறித்தோன்றியது. நம்ம பகுதியில் இந்த ஆயுத புரட்சியில் முத்துராமலிங்கதேவரின் வழிக்காட்டுதலும், ஈடுபாடும் மிகவும் முக்கியம் வாய்ந்தது.

1943 ல் சுபாஷ் சந்திரபோஸின் "டெல்லியை நோக்கி புறப்படு " என்ற வீர முழக்கத்துடன் பர்மாவில் ஆரம்பித்த எங்களின் யுத்தப்படை இம்பாளில் வந்து வெள்ளைக்கார படையோடு மோதிய போது அவர்களின் படையில் நம் இந்திய மக்கள் கூலி படைகளாக இருந்ததைக் கண்டு மிகவும் வருத்தமாக இருந்தது. அந்த யுத்தத்தில் வெள்ளைக்காரப் படையைத் தோற்கடிச்சோம். கூலிப்படையாக இருந்த இந்தியர்கள் எங்களிடம் சரணடைஞ்சாங்க. சரணடைந்தவர்கள் எங்க படையில் சேர ஆசைப்பட்டாங்க ஆனால் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களை கட்சியில் மட்டும் சேர்த்துக்கொண்டார். இவ்வளவு போராட்டத்திற்கு பிறகு வாங்கிய இந்த சுதந்திரம் சரியான முறையில். அனைவருக்கும் பயன்பட்டு இருக்கான்னு பாத்தா ஏதோ சில அரசியல்வாதிகளின் தனிப்பட்ட சுய லாப செயல்பாடுகளைத்தவிர அதிக அளவு குறை சொல்ல முடியாது. இன்னைக்கு நம்ம நாடு ரொம்ப நல்லாவே வளர்ந்து வருகிறது. என்ன ஒன்னு எல்லா மக்களும், எல்லா அரசியல் தலைவர்களும் பொது நன்மைக்காக செயல்பட ஆரம்பிச்சாலே இந்தியா விரைவில் வல்லரசாக மாறிவிடும்.

இந்தியா வல்லரசாகவும் பிற நாடுகளுக்கு எடுத்துக்காட்டாவும் மாறனும்னா நம் இளைஞர்கள் படிப்புக்கேற்ற வேலையைத் தேடுவதில் காலத்தை வீணாக்கமல் சொந்த தொழிலில் ஈடுபட்டு நம் நாட்டின் பொருளாதாரம் வளரவும், மேம்படவும் உழைக்க வேண்டும். என்னைப் பொருத்தவரை விவோகனந்தர் கூறியது போல் இளைஞர்களின் கையில்தான் நம் இந்தியாவின் வளர்ச்சி இருக்கிறது. இன்றைக்கு எங்க பார்த்தாலும் பல வகையான தீவிர வாத செயல்களால் நாட்டு மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகும் சூழ் நிலையில் இருக்கிறோம். இதனை களைவதும், தீவிர வாதத்தை வேரறுப்பதும் நம் இளைஞர்களின் கையில்தான் இருக்கிறது. சுதந்திர தின செய்தியாய் இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புறேன்னா அரசியல் அதிகாரத்தில இளைஞர்களின்பங்குஅதிகப்படுத்தனும்.ஜெய்ஹிந்த்..

# மக்கள் பங்கேற்பால் சீரான வாய்க்கால்கள், வடிகால்கள் பற்றிய பணிகள் குறித்த கண்ணோட்டம்.

நாகை மாவட்டத்தில் ''மக்களே செயல்படுத்தும் நீர்வள மேலாண்மை'' என்ற தலைப்பில் விவசாயத்தில் நிலையான, பேரிடர்களைத் தடுக்கும் முறைக்கான முன்னோடி திட்டங்கள் குறித்த விளக்கத்தினையும், மக்கள் பங்கேற்பால் உருவான திட்ட செயலாக்கத்திற்கான முன் திட்டங்கள் குறித்த தகவல்களையும் கடந்த மாத அலையாத்தியில் சொல்லியிருந்தோம். அதன் தொடர்ச்சியாக நீர்வள மேலாண்மை திட்டத்தின் பயன்களை பயனாளிகளே நம்மிடம் பகிர்ந்து கொள்ளும் விதமாக கடை மடை விவசாயிகளின் கருத்துக்களை நோக்கி அசைகிறது. இம்மாத அலையாத்தி.................

காவிரியில் தண்ணீர் திறந்து விட்டாச்சு இந்த வருடம் குருவை சாகுபடி மிக அமோகமாக இருக்கும் என்ற சந்தோஷ நம்பிக்கையில் இருக்கும் நாகை மாவட்டத்தின் மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்வள மேலாண்மைத்திட்டத்தின் கீழ் பயனடையும் கடைமடை பாசனதாரர் சங்கத்தின் பயனாளிகளிடம் அவர்களின் இந்த உற்சாகத்திற்குத் காரணம் என்ன என்பது பற்றி அறிந்து கொள்வதற்காக கடை மடை கிராமங்களுக்குள் சென்ற அலையாத்தியின் ஆசிரியர் குழுவின் நேரடி பார்வை. இரவு சுமார் 11 மணி இருக்கும் ஏம்பா இன்னும் நல்லா ஆழமா வெட்டு, மன்னை கரையோரமா தள்ளிவிடு, மரம் தடுக்குது பார்த்து... பார்த்து.....என்ற சத்தத்துடன் வாய்க்காலை தூர் வாரி கொண்டிருந்தது ஜெ.சி.பி. வண்டியின் இரைச்சலுக்கு மத்தியில் அதன் ஓட்டுனரிடம் பேசி கொண்டிருந்த அக்கிராமத்தின் பாசன தாரர் சங்கத்தின் உறுப்பினர் திரு ராஜாஅவர்களிடம் இத்திட்டத்தின் சிறப்பு குறித்து கேட்டபோது....சார் எங்க அகலங்கண் பஞ்சாயத்தில பெரு, குறு, சிறு விவசாயிகளுன்னு மொத்தமா 150 குடும்பங்கள் இருக்கிறோம். கிட்டத்தட்ட 60 வேலியில விவசாயம் பண்றோம். குறிப்பா எங்க கிராமம் கடை மடை பகுதிங்கறதுனால வெள்ளக்காலங்களில் நிலத்துல தண்ணீர் புகுந்து பயிர்கள் சேத மடைந்து விடும் என்ற காரணத்தினால வருஷா வருஷம் எங்க பகுதியில உள்ள வடிகால், வாய்க்கால்களை ஒரு சில விவசாயிகள் முன்வந்து ஏதோ ஒரு அளவிற்கு சரிசெய்து கொள்வோம். ஆனா இந்த வருஷம் சில விவசாயிகள் மட்டும் இல்லாம அனைத்து விவசாயிகளும் ஒன்னா சேர்ந்து நீர்வள மேலாண்மைத்திட்டத்தின் உதவியோட பஞ்சாயத்து அளவில் பாசன தாரர் சங்கம் ஒன்றை உருவாக்கி அதன் மூலமாய் பழுதடைந்த வாய்க்கால், வடிகால்களை கண்டறிந்து சீரமைப்பதற்கான செலவுகளை நாங்களாகவே கணக்கிட்டு பெட்ராக் நிதியுதவி மற்றும் பொதுப்பணித்துறையினரின் ஆலோசனைகளைப் பெற்று எங்களோட பங்களிப்பையும் சேர்த்து பராமரிப்பு பணிகளை நாங்களாகவே (காண்ட்ராக்ட் இல்லாமல்) சிறப்பா செய்ஞ்சிகிட்டு வறோம். குறிப்பா 20 ஆண்டு சீர் செய்யப்படாம இருந்த வாய்க்கால்களையும் இந்த ஆண்டு சீரமைக்கிறோம் என்பது தான் சாதனை. வடிகால்களை ஆழப்படுத்துவதால விவசாய நிலத்துல ஏற்படும் நீர் தேக்கத்தை தடுக்கலாம்.

நீர் இன்றி அமையாது உலகு என்ற சொல்லிற்கேற்ப நீரை முறையாக பயன்படுத்தினோம்னா விவசாயத்தை சிறப்பாக மேற்க்கொள்ளலாம். விவசாயம் சிறப்பா இருக்கனும்னா நீர் வரத்து சீராக இருக்கனும். அதேபோல உபரி நீரும் சுலபமா வடியனும் இந்த நீர்வள மேலாண்மை திட்டத்தின் மூலமா விவசாயிகளுக்கிடையே ஒற்றுமை வளர்ந்திருக்கிறது. காவிரியில தண்ணீர் திறந்து விட்டுடாங்க தலைப்புக்கு தண்ணீர் வந்துடுச்சி, இன்னும் ஒரிரு நாளில் வாய்க்காலுக்கு தண்ணீர் வந்துடும், அதனால்தான் இரவு , பகலா பராமரிப்பு பணிகளை செய்திட்டு இருக்கோம். எங்க ஊர்ல இந்த வருசம் விவசாயத்தில எந்த பிரச்சனையும் இருக்காது என சொல்லிக்கொண்டே தனது சமூக பொறுப்பை கவனிக்க சென்றுவிட்டார்.

மேலும் இத்திட்டம் குறித்து பாலகுறிச்சி ஊராட்சியின் பாசனதாரர் சங்கத்தின் தலைவர் திரு. சின்னக்குஞ்சு அவர்கள் கூறுகையில் மக்கள் பங்கேற்போட நீண்ட கால விவசாய வளர்ச்சிக்கான திட்டம் இது. பாசனதார சங்கத்தின் மூலமாக இந்த திட்டம் எங்க பகுதியில பெட்ராக் நிறுவனத்தின் உதவியுடனும், வழிக்காட்டுதலுடனும் சிறப்பா செயல் பட்டு வருகிறது. இத்திட்டத்தில் என்ன சிறப்பம்சம்னா அனைத்து வேலைகளும் பாசனதார சங்கத்தின் மூலமாகவே திட்டமிடப் பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல காலமாக சீர் செய்யப்படாமல் இருந்த கூழையார் வடிகால் இந்த வருசம்தான் சீர்செய்றோம். இதனால வயலில் நீர் தேக்கம் ஏற்படுவதற்கு வழியில்லை. இத்திட்டத்தை பெட்ராக் நிறுவனத்தின் 90 சத வீத நிதி பங்களிப்பும் எங்கள் கிராமத்தின் 10 சதவீத பங்களிப்பும் சேர்த்து திட்டமிடப்பட்ட பணிகளில் எவை மிக முக்கியமானதாக இருக்கிறதோ அந்த வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து சீர்செய்யும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வருங்காலங்களில் பேரிடர் ஏதேனும் ஏற்பட்டாலும் அதைத் தாங்க கூடிய வகையில் இத்திட்டம் உதவி கரமாக இருக்கும்.இந்த பராமரிப்புப் பணிகள் அனைத்தும் பாசனதாரர் சங்ககளின் தொடர் திட்டமிடல் கூட்டங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு, மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. நான் எனது விவசாயம் என்று இருந்த விவசாயிகளை நாம் நமது விவசாயம் என்ற பொதுவான சிந்தனை உருவாக இத்திட்டம் பெரிதும் வழிவகை செய்திருக்கிறது.



## பாசனதார சங்கங்களால் கடை மடை பகுதிகளில் (1,4,& 9) செயல்ப்படுத்தப்பட்ட பணி விபரபட்டியல்:–

நாகை மாவட்டத்தில் கடை மடை 1,4,9 ல் பாசன தாரர் சங்களின் மூலம் நலிந்து வரும் விவசாயத்தை மேம்படுத்தவும் பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மை என்ற தொலை நோக்க சிந்தனையுடன் பாசன வாய்க்கால்கள் மற்றும் வடிகால் வாய்க்கால்களை பொதுப்பணித்துறையின் ஆலோசனையுடன் மராமத்து செய்யப்பட்டு சீர்செய்யப்பட்டது. இப்பணி மாதிரி மற்றும் எடுத்துக்காட்டு திட்டமாக செயல்படுத்தும் வகையில் அனைத்து வேலைகளும் பெட்ராக்கின் நிதி உதவி மற்றும் வழிக்காட்டுதலின் படி அந்தந்த பஞ்சாயத்தில் ஏற்படுத்தப்பட்ட பாசனதார சங்கங்ளின் மூலமாகவே செயல்ப்படுத்தப்பட்டது. இம்மூன்று கடைமடைகளிலும் பாசனதாரர் சங்கங்களால் செயல்ப்படுத்தப்பட்ட வேலை அதற்கான செலவினத்தொகை இவ்விதழில் வெளியிடப்படுகிறது.

### கடைமடை ஒன்பதில் பாசனதாரர் சங்கங்ளால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் தொகுப்பு அறிக்கை – 02.07.2008

| பஞ்சாயத்தின் பெயர் | பெற்ற பணம் | செலவு செய்த பணம் | 10 சதம் பங்களிப்பு | தூர் வாரிய வேலையின் விவரம் | | கட்டுமான வேலையின் விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தூர் வாரு தல் | மொத்த நீளம் (மீட்டரில்) | பல –கை | கவ னை கள் | மதகு | தடுப்புச் சுவர் |
| அகலங்கன் | 124000 | 149715 | 26000 | 2 | 3343 | 3 | 3 | 0 | 0 |
| சின்னத்தம்பூர் | 133000 | 141977 | 10337 | 4 | 7002 | 4 | 1 | 0 | 0 |
| சோழ வித்தியாபுரம் | 130000 | 136350 | 60350 | 2 | 7493 | 0 | 0 | 0 | 0 |
| குறிச்சி | 130000 | 131577 | 5000 | 4 | 7152 | 0 | 0 | 0 | 0 |
| கருவேலங்கடை | 119000 | 124560 | 11000 | 4 | 4992 | 1 | 0 | 0 | 0 |
| மகாதானம் | 127000 | 136300 | 1000 | 4 | 4071 | 0 | 1 | 1 | 0 |
| ஓரத்தூர் | 100600 | 109501 | 8901 | 2 | 4631 | 0 | 0 | 1 | 0 |
| பாலக்குறிச்சி | 137000 | 143664 | 6664 | 5 | 7240 | 0 | 0 | 0 | 0 |
| பாப்பாக்கோவில் | 57000 | 62800 | 5800 | 0 | 0 | 2 | 1 | 0 | 0 |
| செம்பியன் மகாதேவி | 130000 | 136230 | 9557 | 4 | 9203 | 6 | 0 | 0 | 0 |
| தலையாமலை | 129000 | 138053 | 9053 | 3 | 5848 | 0 | 1 | 0 | 0 |
| தண்ணிலப்பாடி | 100000 | 111170 | 11170 | 0 | 0 | 4 | 4 | 0 | 0 |
| வடகவர் | 124000 | 133800 | 9800 | 1 | 8123 | 0 | 0 | 0 | 0 |
| வடுகைச்சேரி | 140000 | 146470 | 11500 | 0 | - | 0 | 2 | 0 | 3 |
| வேப்பஞ்சேரி | 125000 | 132584 | 8570 | 4 | 3847 | 0 | 6 | 0 | 0 |
| பொதுவாய்க்கால் | - | - | - | 1 | 4282 | - | - | - | - |
| மொத்தம் | 1805600 | 1934750 | 149651.5 | 40 | 77230 | 20 | 19 | 2 | 3 |

**கடைமடை ஒன்று மற்றும் நான்கில் பாசனதாரர் சங்கங்ளால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் தொகுப்பு அறிக்கை செப்டம்பர் மாத அலையாத்தியில் வெயிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.**

# பேரிடர் மேலாண்மை மற்றும் பாதிப்பு குறைப்பில் உள்ளூர் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வு

## முன்னோட்டம்

ஆகஸ்பாம் அமெரிக்கா மற்றும் பெட்ராக் தொண்டு நிறுவனம் இணைந்து பேரிடர் மேலாண்மை மற்றும் பாதிப்பு குறைப்பில் உள்ளூர் தலைமைத்துவம் எவ்வாறு மேம்படுத்தப்பட்டு இருக்கிறது, பேரிடர்பாதிப்பு குறைப்பில் மக்களின் தெளிவு எவ்வாறு உருவாக்கப்படுகிறது. என்பதை ஆய்வு செய்ய கள ஆய்வுப்பணியை சுனாமியால் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டமான நாகப்பட்டினத்திலும், குறைவான பாதிப்புக்குள்ளான கடலூர் மாவட்டத்திலும் கள ஆய்வாளர்களை நியமித்து ஆய்வுப்பணியை நடத்தி வருகிறது.

## ஆய்வின் நோக்கம்

- பேரிடர் மேலாண்மை குறித்த நடவடிக்கைகள் விஷயங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த..
- சமுகம் மற்றும் பொருளாதார ரீதியில் பின் தங்கி உள்ள மக்களின் பேரிடர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்தத் திறனை உறுதி செய்யவும்...
- பேரிடரின் போது, மீட்பு, நிவாரணம், மறுசீரமைப்பு, மற்றும் மறு கட்டமைப்பு காலங்களில் மக்கள் சந்திப்த தடைகள், இடையூறுகள் குறித்து அறியவும்...
- பேரிடரை எதிர்கொள்ளும் மக்களின் திறன் எவ்வாறு மேம்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை அறியவும்..
- பேரிடருக்கு முன்னும், பேரிடரின் போதும் மற்றும் பேரிடருக்கு பின்னும் எவ்வாறு மக்களின் ஆளுமைத்திறன், பேரிடர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு தொண்டு நிறுவனங்களாலும், அரசாலும் வளர்க்கப்பட்டுயிருக்கிறதா என்பதை ஆய்வு செய்யவும்..
- உள்ளூர் அதிகார அமைப்பு எவ்வாறு வெளிப்படைத் தன்மையுடனும், மக்கள் பங்கேற்புடனும் இருக்கின்றன என்பதை அறிய...
- உள்ளூர் தலைமைத்துவம் மற்றும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி பேரிடர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைகுறித்த செயல்திட்டத்தை உருவாக்குவது, மேலும் அதனை மனித நேய ஆர்வலர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவும் வகையில் பொதுவான மாதிரி திட்டத்தைத் தயார் செய்து அனைவருக்கும் பயன்படும் வகையில் வெளியிடல்...

## ஆய்வின் வெளிக்கொணர்வு....

1. சுனாமிக்குப் பின் உலகளாவிய உதவிகளின் தாக்கம் மற்றும் கற்றுக்கொண்ட முக்கியமான பாடங்கள் (விஷயங்கள்) பற்றிய ஆய்வுத் தொகுப்பை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடல்....

2. பேரிடர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு குறித்த கருத்துப்பட்டறை மற்றும் பயிற்சி பட்டறைகளுக்கு உள்ளூர் விஷயங்கள் (அறிவு) , திறன்கள் குறித்த தகவல்களை பயன்படுத்துதல்...

3. உள்ளூர் திறன் கட்டமைப்பில் இருக்கும் நல்ல விஷயங்களை திரைநெட்டின் மூலம் ஆவணப்படுத்தி அதன் செய்தி மடலில் வெளி உலகிற்கு தெரியப்படுத்துதல்.

இவ்வாய்வானது தற்போது நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஐந்து கிராமங்கள் வீதம் பெட்ராக் கள ஆய்வாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்த ஆய்வு குறித்த தகவல்கள் மற்றும் ஆய்வு அறிக்கைகள் ஒவ்வொரு மாதமும் திரைநெட்டின் அலையாத்தி செய்தி மடலில் வெளிக்கொணரப்படும்.


தொடர்புக்கு ...

**TRINet**
The Resource and Information Network : for the coast

டிரைநெட்,
மே/பா பூமிகா அறக்கட்டளை, அடுக்ககம் 3அ,
புதிய எண்.41, முரேஸ் கேட் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 600 018



**தனிச்சுற்றுக்கு மட்டும்**



**bedroc**

குடியிருப்பு எண்.5, மேட்டுபங்களா,
புதிய கடற்கரைச் சாலை,
காடம்பாடி, நாகப்பட்டினம்-611 001.
போன்: 04365-247687, 247689
இமெயில் : *alaiyathi@bedroc.in*